# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைச்செல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடக செய்தி 24 / 2017 நாள் : 22.07.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன்.

பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகை செய்தி

## ஊடகச் செய்தி

## அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சம்பளத்தை குறைக்கச் சொன்ன தனியரசு எம்.எல்.ஏ. மன்னிப்பு கேட்க வேண்டும் மறுதலிப்பாரேயானால் மக்கள் மன்றம் அவரை தண்டிக்கும்! தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டன அறிக்கை

நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானிய கோரிக்கையின்போது பேசிய தனியரசு எம்.எல்.ஏ., அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தினை குறைத்திட வேண்டும் என்றும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாத ஓய்வூதியத்தை ரூ.50 ஆயிரமாகவும், தற்போது சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மாத ஊதியத்தை ஒரு லட்சம் ரூபாயாகவும், மாவட்ட ஆட்சியர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

''நான் நல்லா இருக்கணும்னா நாலு பேர் நாசமா போறதுல தப்பில்லை'' என்கிற ஒரிஜினல் அரசியல்வாதிக்கே உரிய ஸ்டைலில் பேசியிருக்கும் தனியரசு எம்.எல்.ஏ., அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பளத்தை ஏன் குறைக்க வேண்டும் என்றோ, அவர் அப்படி கூறுவதற்கு என்ன காரணம் என்றோ விளக்கவில்லை. ஊதிய மாற்றத்தினை ஏற்படுத்தாமல் தமிழக அரசு காலம் கடத்தியும், பொய் வாக்குறுதிகள் அளித்து அதை செயல்படுத்தாமல் அமைச்சர்கள் ஏமாற்றியும் வரும் நிலையில், இவரின் சிறுபிள்ளைத்தனமான பேச்சு சீரிய கண்டனத்திற்குரியதாகும். அதிமுகவின் ஊதுகுழல் எம்.எல்.ஏ.வாக இருக்கும் இவர் அதிமுக அரசை பாராட்ட வேண்டும் என்று நினைத்தாலோ, தனக்கு சம்பள உயர்வு வேண்டும் என்று எண்ணினாலோ அதை நேரடியாக கேட்டு பெற்றுக்கொள்வதில் யாருக்கும்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, நேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

ஆட்சேபனையில்லை. ஆனால் ஏற்கெனவே அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் 20 மாத காலமாக 8வது ஊதிய மாற்றத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில் தனியரசு எம்.எல்.ஏ.வின் பேச்சு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

ஐந்து வருடங்கள் எம்.எல்.ஏ.வாக இருப்பவருக்கு ஆயுள் முழுவதும் ஓய்வூதியம் ரூ.50000/–ஆக மாதந்தோறும் உயர்த்திக் கேட்பதில் உள்ள நியாயங்களைவிட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களுக்கான ஊதியத்தை உயர்த்திக் கேட்பதில் உள்ள நியாயங்கள் ஆயிரம் மடங்காகும், கூவத்தூரில் கூடாரம் போட்டு எம்.எல்.ஏ. விடுதியில் சரணடைந்து, தொகுதி பக்கமே தலைகாட்டாத எம்.எல்.ஏ.க்களுக்கு மாத ஊதியம் ரூ.1,05,000/– ஆக உயர்த்தப்பட்டிருப்பது தனியரசு போன்ற எம்.எல்.ஏ.க்களின் மனசாட்சியை உறுத்தப் போவதில்லை என்பது அவர் பேசியிருக்கும் பேச்சிலிருந்தே தெரிகிறது. தொகுதி பக்கமே தலைகாட்டாத எம்.எல்.ஏ.க்களுக்கு இந்தச் சம்பளம் தேவையில்லை என தனியரசு பேசியிருந்தால் அவர் உண்மையான மக்கள் பிரதிநிதியாக தெரிந்திருப்பார்.

நாட்டில் பசி, பஞ்சம், பட்டினி, வறட்சி, விவசாயிகள் தற்கொலை, தண்ணீர் பிரச்சனை, விவசாயிகள் கடன்களை ரத்து செய்யக் கோரி போராட்டம் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்க முன்வராத அரசு, இந்த ஆட்சியில் இம்மியளவும் மக்கள் சேவையில் ஈடுபடாத, தொகுதி பக்கமே எட்டிப் பார்க்காத, முடங்கிப் போன அரசுக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கும் காரியத்தை மட்டுமே கவனிக்கும் எம்.எல்.ஏக்களின் சம்பளத்தையும், படிகளையும், ஓய்வூதியத்தையும் எந்தவித போராட்டமும் இன்றி, பரிந்துரையும் இன்றி ஏகபோகமாக உயர்த்தி இருப்பதன் மூலம் அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ பொதுமக்களோ எக்கேடு கெட்டுப் போங்கள் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை, நாங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற அரசின் மனப்போக்கும், அதை ஆதரிக்கும் தனியரசு போன்ற எம்.எல்.ஏக்களின் பேச்சும் செய்கைகளும் கடும் கண்டனத்திற்குரியவை.

எந்தப் போராட்டம் நடத்தினாலும் அரசிடம் நிதியில்லை என கை விரிக்கும் அரசாங்கம், நாட்டு மக்கள் மீது உண்மையான அக்கறையும் விசுவாசமும் கொண்டிருந்தால் பஞ்சமும், வறட்சியும் தலைவிரித்தாடுவதாக பாதிக்கபட்ட மக்கள் திரள் போராடுகிறபோது ஓலமிடுகிற அரசு சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை ரூ.50000/–லிருந்து ரூ.105000/–ஆக உயர்த்தியிருப்பதிலிருந்து தன்னுடைய உண்மை முகத்தை நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது.

எந்த அடிப்படையும் இல்லாமல், யாரோ எழுதிக் கொடுத்ததை சட்டமன்றத்தில் வாசித்துள்ள தனியரசு, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பளத்தை எந்தக் காரணமும் இன்றி குறைத்து வழங்கச் சொன்னதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களுடன் சேர்ந்து தனியரசு போன்ற அரசின் கைத்தடி எம்.எல்.ஏ.க்களை மக்கள் மன்றத்தில் கண்டிப்பாக தண்டிப்பார்கள்.

(மு. அன்பரசு)
மாநில பொதுச் செயலாளர்